**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : S.C.No. 5 /2010

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 43

Defence

Court

Name : திரு. சந்திரசேகர்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 1st August 2019.

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மாநகர் சிறப்புநுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசி காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 25.1.2008 ஆம் தேதி தென்காசி காவல் சார்பு ஆய்வாளர் அன்பு பிரகாஷ் வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு ஒப்படைத்த நிலைய கு.எண். 108/08 பிரிவு 324 இதச மற்றும் 3 மற்றும் 5 Explosive Substances Act படியான வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தென்காசி வட்டாட்சியருக்கு தகவல் கூறி குத்துக்கல் வலசை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களை சம்பவ இடத்திற்கு வரவழைத்து நான் போலீஸ் பார்ட்டி சகிதம் சம்பவ இடமான தென்காசி புதிய பேருந்து நிலையம் சென்று எரியும் மின்சார விளக்கு வெளிச்சத்தில் 02.00 மணிக்கு சாட்சிகள் அம்மையப்பன் கிராம நிர்வாக அலுவலர் குத்துக்கல் வலசை, முருகேசன் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். திருநெல்வேலி வெடிகுண்டு

நிபுணர் அவர்களுக்கும் அறிவியல் அலுவலர் அவர்களுக்கும் தகவல் கூறி சம்பவ இடத்திற்கு வரவழைத்தேன். சம்பவ இடத்தில் TN 76 C 4200 என்ற எண்ணுள்ள டாடா ஏஸ் லோடு ஆட்டோ ஒன்று நின்றது. அந்த ஆட்டோவின் முன்புற இடது கதவில் இரண்டு இடத்திலும் சற்று பின்புறம் பாடியில் ஒரு இடத்திலும் குண்டு வெடித்ததால் ஏற்பட்ட சேதம் காணப்பட்டது. ஆட்டோ நின்ற இடத்தின் மேல்புறம் உள்ள பிளாட்பாரத்தில் சிமெண்ட் பெயர்ந்து சேதாரம் காணப்பட்டது. அங்கு வெடிகுண்டு வெடித்த தடயங்கள் கிடந்தது. அங்கிருந்த அனைத்து கடைகளும் அடைக்கப் -பட்டிருந்தன. மேற்படி ஆட்டோவின் இடது முன் சக்கரம் மாற்றப்பட்டிருந்தது. மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.51. மாதிரி வரைபடம் வரைந்தேன். அது அ.சா.ஆ.52. காவல் துப்பறியும் நாய் வரவழைக்கப்பட்டது. பின்பு வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்ட வெடிகுண்டு நிபுணர் குழு மற்றும் அறிவியல் உதவியாளர் ஆகியோர் சம்பவ இடத்திலும் அதனை சுற்றியிருந்த இடங்களிலும் இருந்த வெடித்த பொருட்களை 1 முதல் 8 வரை வகைப்படுத்தி வெடிகுண்டு நிபுணர் ஆஜர் செய்த தடயங்களையும், அறிவியல் உதவியாளர் 9 முதல் 11 வரை வகைப்படுத்தி ஆஜர் செய்த பொருட்களையும் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றிறேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.53. கைப்பற்றப்பட்ட பொருட்கள் சா.பொ. 8 முதல் 18 ஆகும். கைப்பற்றப்பட்ட பொருட்களில் வரிசை எண்.8 ல் இருந்த வெடிக்காத டெட்டனேட்டர் என்ற பொருளை மட்டும் தனியாக பிரித்து அதனை சட்டப்படி செயல் இழக்க செய்வதற்காக பாதுகாத்து வைத்தேன். வரிசை எண்.8 டெட்டனேட்டர் செயலிழப்பு செய்யப்பட்டு திரும்ப பெறப்பட்டுள்ளது. அது வரிசை எண்.8 உட்பட 3 எண்ணிக்கை ஆகும். காலை 4.30 மணிக்கு மேற்படி ஆட்டோ TN 76 C 4200 ஐயும் அதன் வெடித்த டயரையும் மகஜர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். (அந்த கைப்பற்றுதல் மகஜர் தான் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ) சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வெடிக்காத டெட்டனேட்டரை செயல் இழக்க செய்ய வேண்டி திருநெல்வேலி வெடிபொருள் கண்டுபிடிப்பு மற்றும் செயல் இழக்க பிரிவு ஆய்வாளருக்கு உத்தரவிடவேண்டி தென்காசி நீதித்துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.54. சாட்சிகள் சேதுபிள்ளை, ஆறுமுகம், குமார், மகேந்திரன், A.குமார், கண்ணன், காந்தி விநாயகம், பாலவெங்கடேஷ், முருகன், பாட்சா, ஆறுமுகம், குத்தாலிங்கம், ஜெயராமன், முத்துகிருஷ்ணன், முநிகா 230, பழனிசாமி ஆய்வாளர், வெடிகுண்டு பிரிவு, விஷ்வா முன்னா முகமது அறிவியல் உதவியாளர், அம்மையப்பன், கிராம

நிர்வாக அலுவலர், குத்துக்கல்வலசை, முருகேசன்,கிராம உதவியாளர். குத்துக்கல் வலசை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயங்களை பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற்று தரவேண்டி சென்னை தடய அறிவியல் ஆய்வு துறைக்கு அனுப்பி வைக்க வேண்டி தென்காசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.55. வழக்கில் சேதம் அடைந்த TN 76 C 4200 டாடா ஏஸ் லோடு ஆட்டோவை ஆய்வு செய்து சான்று அளிக்க மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உத்தரவிட வேண்டி தென்காசி குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.56. நான் உச்ச நீதிமன்ற அலுவலாக டெல்லி செல்ல வேண்டியிருந்ததால் இந்த வழக்கு கோப்பை உத்தரவுபடி குற்றாலம் காவல் ஆய்வாளர் குப்புசாமி என்பவரிடம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

எனது புலன் விசாரணையின் படி நடந்ததாக சொல்லப்படும் குண்டுவெடிப்பு இரவு 8.30 மணிக்கு நடந்துள்ளதா என்றால் ஆம். மறுநாள் அதிகாலை 1.00 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சுமார் 4 1/2 மணிநேரம் காலதாமதம் ஆகியுள்ளது என்றால் சரிதான். அதிகாலை 2.00 மணிக்கு தான் நான் சம்பவ இடம் போனேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 5 1/2 மணிநேரம் கழித்து தான் சம்பவ இடம் போய் இருக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும். தென்காசியில் இன்னும் இரண்டு இடங்களில் குண்டு வெடித்திருந்ததால் அந்த இடங்களுக்கு போய்விட்டு இந்த சம்பவ இடத்திற்கு வருவதற்கு நேரமாகிவிட்டது. வட்டாட்சியருக்கு எனக்கு தகவல் தெரிந்தவுடன் தகவல் தெரிவித்தேன். எனக்கு அதிகாலை 1.30 மணிக்கு தகவல் கிடைத்தது. வட்டாட்சியருக்கு நான் நேரில் தகவல் சொன்னேன். வட்டாட்சியரும் நானும் இந்த சம்பவ தகவல் கிடைத்த நேரத்தில் ஏற்கனவே வெடிகுண்டு வெடித்த ஆர்எஸ்எஸ் அலுவலகத்தில் இருந்தோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே வெடித்ததாக கூறப்படும் ஆட்டோவின் டயர் மாற்றப்பட்டிருந்தது. ஆட்டோ டிரைவர் தனது டயர் பஞ்சராகிவிட்டதாக நினைத்து மாற்றியுள்ளார். வெடித்ததாக கூறப்படும் டயர் எங்களால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆட்டோ டிரைவரை விசாரித்தேன். அவர் தனது வண்டியின் டயர் பஞ்சராகிவிட்டதாக நினைத்து மாற்றியதாக கூறினார். வண்டியில் இருந்து பெரிய சத்தம் வந்ததாகவோ ஏதேனும் வெடித்ததாகவோ ஆட்டோ டிரைவர் என்னிடம் கூறினாரா என்றால் ஆம். பஸ் நிலையத்தில் அரசு போக்குவரத்து கழக மேலாளரை விசாரித்தேனா என்றால் இல்லை.

முன்பதிவு அலுவலரை விசாரித்தேன். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் குறித்துள்ளேன். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் குறிப்பிடப்பட்டு எழுத்தால் எழுதப்படவேண்டும் என்றால் சரிதான். நான் போனவுடன் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. மோப்ப நாய் வரவழைக்க குறிப்பான வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வெடிகுண்டு நிபுணருக்கும் தடய அறிவியல் உதவியாளருக்கும் அவர்கள் இன்னொரு சம்பவ இடத்தில் இருந்ததால் நேரடியாக தகவல் கொடுக்கப்பட்டது. நான் சம்பவ இடம் போனதற்கு பிறகு உடனடியாக அவர்களும் வந்துவிட்டார்கள். சம்பவ இடத்தில் வெடிமருந்துகளை வெடிகுண்டு நிபுணர் தான் எடுத்து ஆஜர்படுத்தினார். இந்த வழக்கு விசாரணையை குற்றாலம் காவல்நிலைய காவல் ஆய்வாளருக்கு மாற்றுவதற்கு எழுத்து மூலமான உத்தரவு பெறப்பட்டதா என்றால் ஆம். வெடி குண்டு வெடித்ததால் ஆட்டோவை தவிர பேருந்துகளுக்கு ஏதும் சேதம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போனபோது கடைகள் அடைக்கப்பட்டிருந்தது. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகள் முன்னிலையில் எவ்வித வெடிபொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தென்காசி நகரில் இருந்த மதரீதியான பதட்டத்தை தணிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.